A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 25 / 2024</u>**

திரு.கோ.இலட்சுமிபதி
த/பெ.கோவிந்தசாமி,
எண்.7/21, பெஸ்தபாளையம்,
ஆத்தூர் கிராமம், சோழவரம் அஞ்சல்,
பொன்னேரி வட்டம்,
சென்னை – 600 067.

………மேல்முறையீட்டாளர்
(திரு.கோ.இலட்சுமிபதி)

எதிர்

1. செயற்பொறியாளர்/இ&ப/ஆவடி,
சென்னை மின் பகிர்மான வட்டம் /மேற்கு
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.229, என்.எம் ரோடு, ஆவடி, சென்னை – 600054.

. . . எதிர்மனுதாரர்
(திரு.P.சவுந்தரராஜன், செயற்பொறியாளர் /இ&ப/ஆவடி)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 22-04-2024</u>**

**<u>கேட்புரை நாள்: 29-05-2024</u>**

**<u>ஆணை நாள்: 10-06-2024</u>**

22-04-2024 அன்று பெறப்பட்ட திரு.கோ.இலட்சுமிபதி, த/பெ.கோவிந்தசாமி, எண்.7/21, பெஸ்தபாளையம், ஆத்தூர் கிராமம், சோழவரம் அஞ்சல், பொன்னேரி வட்டம், சென்னை – 600 067 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 25/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 29-05-2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

தனது மின் இணைப்பு எண்.057-003-2157 மற்றும் 057-003-2268 க்கு மின்பயன்பாடு இல்லாத காலத்தில் தவறுதலாக கணக்கீடு செய்யப்பட்ட மின்கட்டண தொகை ரூ.1,20,880/-யை இரத்து செய்யுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 மேல்முறையீட்டாளரால் தனது அரிசி ஆலை பயன்பாட்டிற்காக மின் இணைப்பு எண்.057-003-2157 மற்றும் 057-003-2268 பெறப்பட்டு உபயோகப்படுத்தாத காலத்திற்கு குறைந்தபட்ச மின்கட்டணம் செலுத்திய பின்பும், கூடுதலாக ரூ.1,20,880 உதவி பொறியாளர் அவர்களால் செலுத்த அறிவுறுத்தியதை எதிர்த்து மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 தமிழ்நாடு மின்வழங்கல் விதி ஒழுங்குமுறை விதி 11ன் படி மின் இணைப்பு எண்.057-003-2157க்கு 30-12-2017 முதல் 15-02-2018 வரையிலும் மற்றும் மின் இணைப்பு எண். 057-003-2268க்கு 29-12-2017 முதல் 15-02-2018 வரையிலும் மீட்டர் பழுந்தடைந்த காலத்திற்கு சராசரி மின்கட்டண தொகையை மின்நுகர்வோர் குறைதீர்மன்ற ஆணைக்கிணங்க மறு கணக்கிடு செய்து ரூ.1,20,880/- தொகையை 7 நாட்களுக்குள் செலுத்துமாறு Lr.No.AE/O&M/SPD/F.Audit/D.No.12(1)/23-24, Dated : 30-01-2024, Lr.No.AE/O&M/SPD/F.Audit/D.No.12(2)/23-24, Dated : 30-01-2024 வாயிலாக மேல்முறையீட்டாளரிடம் தெரிவித்ததாகவும், ஆனால் தற்சமயம் வரை அத்தொகையை மேல்முறையீட்டாளர் கட்டவில்லை என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 தனது மின் இணைப்பு எண்களுக்கு விதித்துள்ள தொகையை இரத்து செய்ய வேண்டி மேல்முறையீட்டாளர் சென்னை மின் பகிர்மான வட்டம்/மேற்கு, மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 16.06.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சென்னை மின் பகிர்மான வட்டம்/மேற்கு, 18.11.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **<u>மன்றத்தின் தீர்வு :</u>**

3.1 சென்னை மின் பகிர்மான வட்டம் / மேற்கு, மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 18.11.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *As per the above findings, the slips raised by the Audit branch vide no.12 Dated 24.05.2018 in service connection no.057-003-2157 & 13 Dated 25.05.2018 in service connection no.057-003-2268 are set aside and the forum directs the respondent to compute the shortfall for the meter defective period from 30.12.2017 to 15.02.2018 in service connection no.057-003-2157 and from 29.12.2017 to 15.02.2018 in service connection no.057-003-2268 adopting regulation 11 of the Tamil Nadu Electricity Supply Code and intimate the same to the petitioner within 4 weeks from the date of receipt of this order.*
>
> *The petitioner is hereby directed to pay the amount on receipt of the intimation by the respondent.*
>
> *A compliance report shall be submitted to the forum within 6 weeks on receipt of this order.*
>
> *With this, the petition is disposed of.*

4.0 **<u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 29–05–2024 அன்று நேரில் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு.கோ.இலட்சுமிபதி அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு.P.சவுந்தரராஜன், செயற்பொறியாளர் /இ&ப/ஆவடி சென்னை மின் பகிர்மான வட்டம்/மேற்கு ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:**

5.1 மேல்முறையீட்டாளர் தனது மின்இணைப்புகளுக்கு மின்அளவி பழுதின் காரணமாக கோரப்பட்ட தணிக்கை தொகையை தள்ளுபடி செய்ய எதிர்மனுதாரர் தணிக்கை துரைக்கு பரிந்துரை செய்த நிலையிலும், மேலும் அதை வலியுறுத்தி கடந்த (1) 24.06.2019, [2] 31.05.2024 [3] 27.07.2022 [4] 17.03.2023 செயல்பட்ட நிலையிலும் அப்பரிந்துறையை தணிக்கை துறை ஏற்கவில்லை என்றும் மேலும் உரிமதாரரின் பணியாளர்கள் ஒவ்வொறு மாதமும் சோதனை செய்ததால், தமது நுகர்வோர் ஆவணத்திலும், மீட்டர் இயங்கவில்லை என்று பதிவு இருந்ததாலும், மீட்டர் ஓட்டத்தை கண்டுபிடிக்கும் பொறியாளர் மீட்டர் பதிவு செய்ய முடியவில்லை, தொழில் நுட்ப கோளாறு ஏதுமில்லை என்று அறிக்கையின் பேரிலும், மேற்கண்ட தொகை செலுத்த வேண்டும் என்ற தணிக்கை துறையின் அறிக்கையை வாபஸ் பெறவேண்டும் என்று பரிந்துரை செய்த பின்பும் மீண்டும் தணிக்கை துறை ஏற்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

5.2 மேல்முறையீட்டாளர் தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி கோரப்பட்ட தகவல் மற்றும் மேற்கண்ட மின் இணைப்பு உள்ள அரிசி ஆலையை இயக்காதபோது, இயக்கப்போவதில்லை என்றும் மீண்டும் இயக்கும்போது இயக்கப்போகிறோம் என்றும் தானும் குத்தகை தாரரும் உரிய இள நிலைப் பொறியாளர் அவர்களிடம் எழுத்து மூலமாக தகவல் தெரிவித்த கடிதத்தில் ஒப்புதலும் பெற்றுள்ளதாகவும், மேலும் ஒவ்வொரு மாதமும் உரிய குறைந்தபட்ச தொகையை செலுத்தி வந்துள்ளதாகவும் மற்றும் மின் துறை (1) இள நிலை பொறியாளர் (2) உதவி செயற்பொறியாளர் (3) செயற்பொறியாளர் (4) மேற்பார்வை பொறியாளர் மற்றும் (MRT) இள நிலைபொறியாளர் போன்ற துறை பணியாளர் பலரிடம் மனு சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

5.3 செயற்பொறியாளர் ஆவடி அவர்கள், (CGRF) நுகர்வோர் குறை தீர்கும் மன்ற ஆணையாளர் மற்றும் இரு உறுப்பினர்கள் ஆணையிட்டவாறு மின் இணைப்பு எண் 057-003-2157 நாள் 30.12.2017 15.02.2018 வரை மற்றும் 057-003-2268 நாள் 29.12.2017 முதல் 15.02.2018 வரை உள்ள காலமானது இந்த 2 மீட்டர்களில் "உபயோகத்தில் இல்லை", என்று காட்டியுள்ளன என்று வாதியே தனது வாதுரையில் தெரிவித்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மின் மீட்டர் பழுதடைந்ததை கண்டுபிடித்து விட்டதனால், புதியதாக 2 மீட்டர்களும் பொறுத்தப்பட்டதாகவும், மீட்டர் பொருத்தப்பட்ட பின்னரும் ஓரிரு மாதம் அரிசி ஆலையை இயக்காததால் மீட்டரும் இயங்கவில்லை என்றும் (CGRF) நுகர்வோர் குறை தீர்கும் மன்ற ஆணையாளர் மற்றும் இரு உறுப்பினர்கள் ஆணையிட்டவாறு மின் இணைப்பு எண் 057-003-2157 நாள் 30.12.2017 முதல் 15.02.2018 வரை ரூ.57,496 மற்றும் 057-003-2268 நாள் 29.12.2017 முதல் 15.02.2018 வரை ரூ.63,384 ஆகமொத்தம் ரூ.1,20,880 ஐ குறைவுத்தொகை என்று செலுத்த உத்திரவிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட சூழ் நிலையில் (CGRF) நுகர்வோர் குறை தீர்கும் மன்ற ஆணையாளர் மற்றும் இரு உறுப்பினர்கள் ஆணையிட்டவாறு மின் இணைப்பு எண் 057-003-2157 30.12.2017 முதல் 15.02.2018 வரை ரூ. 57,490 மற்றும் 057-003-2268 நாள் 29.12.2017 முதல் 15.02.2018 வரை ரூ 63,384 ஆகமொத்தம் ரூ 1,20,874 ஐ குறைவுத்தொகை என்று செலுத்த உத்திரவிட்டதை இரத்து செய்வதே நீதியை நிலை நிறுத்துவதாக அமையும் என்று தங்களை பணிவோடு கேட்டுக்கொள்வதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 உதவி பொறியாளர் அவர்கள் மின்சாரம் உபயோகப்படுத்தாத காலத்திற்கும் குறைந்தபட்ச மின்கட்டணம் செலுத்தியும், கூடுதலாக ரூ.6,23,210 + 6,61,023 = 12,84,233 செலுத்த அறிவுறுத்தியதை எதிர்த்து, மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் அளித்த தீர்ப்பில் நுகர்வோர் குறை தீர்க்கும் தலைவர் அவர்களிடம் முறையிட்டதன் பேரில் இரண்டு மின் இணைப்புகளுக்கும் முறையே ரூ.57,496 + 63386 = 1,20,880 செலுத்த வேண்டுமென்று தனக்கு தீரப்பு அளிக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மேற்கண்ட மின் இணைப்புகள் இரண்டுக்கும் சேர்த்து 16-11-2016 மற்றும் 19-03-2018 மற்றும் 19-04-2018 கடிதத்தின் படி மனு கொடுத்தும் 1, மீட்டர் நுகர்வோர் அட்டை மற்றும் 2 மீட்டர் நுகர்வோர் புத்தகத்திலும் (குறை தீர்க்கும் தலைவர் குறிப்பிட்டுள்ள ஜனவரி 2017 ல் மீட்டர் உபயோகத்தில் இல்லை என்றும். 01.02.2018 முதல் 14.02.2018 வரை அதே மீட்டர் உபயோகத்தில் இல்லை என்பதால் 15.02.2018 ல்

புதிய மீட்டர் பொறுத்தப்பட்டதாகவும், இந்த சுழ் நிலையில் இயங்காத மேற்கண்ட இரண்டு மீட்டர்களுக்கும் முறையே

மின் இணைப்பு எண் 057 003 2157

(29.12.2017 முதல் 30.01.2018 வரை யூனிட் 5717 க்கு ரூ 38,280

சராசரி யூனிட் 2858 க்கு 01.02.2018 முதல் 15.02.2016 வரை ரூ 19216

மொத்தம் ரூ. 57,496

மின் இணைப்பு எண் 057 003 2268 க்கு

(30.12.2017 முதல் 29.01.2018 வரை யூனிட் 4900 க்கு ரூ 45,981

சராசரி (30.01.2018 முதல் 15.02.2018 வரை யூனிட் 2613 க்கு ரூ 17403

மொத்தம் ரூ. 63,384

ஆக மொத்தம் ரூ.1,20,880

மேற்கண்டவாறு கணக்கீடு செய்து பணத்தை செலுத்த தீர்ப்பளிக்கப்பட்டதாகவும், நுகர்வோர் குறைதீர்க்கும் தலைவர் மற்றும் 2 உறுப்பினர்கள் அளித்த தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள காலத்தில் மீட்டர் உபயோகத்தில் இல்லை என்றும் மின் இணைப்பை உபயோகப்படுத்தவில்லை என்றும் (M.R.T Report) எம்.ஆர்.டி அறிக்கையில் உள்ளதால், குறைதீர்க்கும் அலுவலரால் செலுத்த தீர்பளித்த தொகையை இரத்து செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்வதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 மேலும் மின் இணைப்பு எண் 057 003 2157 ல் காட்டியுள்ள யூனிட் 38 மின் இணைப்பு எண் 057 003 2268 ல் காட்டியுள்ள யூனிட் 7.2 ஆக மொத்தம் 45.2 யூனிட்டுக்கு உரிய தொகையை செலுத்த தயாராக உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 The Respondent has submitted that the service connection no.057-003-2157, service connection nó 057-003-2268 stands in the name of Thiru. G. Lakshmipathy under tariff LN3B with sanctioned load of 101 KW and under tariff LM3B with sanctioned load of 75 KW respectively. The petitioner represented that he has objected to pay audit shortfall arrears of Rs 6,23,210/- against his EB service connection 057-003-2157 for the period from 10/2016 to 02/2018 and Rs.6,61,023/- against his another service connection 057-003-2268 for the period from 12/2016 to 02/2018.

6.2 The Respondent has stated that the petitioner has objected for the above audit shortfall (1. Audit slip No. 12 Para No. ANN-III (R5.6,23.210) Audit slip No. 12 Para No. ANN-III (Rs.6.61,023) the past five years several times to concerned officials and though they all acknowledged his grievance and recommended for dropping, the Audit Branch does not accept the proposal. He has also given 'N' number of grievance petitions in AE office, AD office and EE office.

6.3 In this regard the respondent has submitted that the Audit dropping proposal details as follows.

| Letter addressed to the Audit branch | Remarks of the Audit branch |
|---|---|
| Executive Engineer/O&M/Avadi-letter dt:24.06.2019 (Based on the consumer representation vide letter 17.05.2019) | Audit brunch vide letter dt:06.09.2019 has given the following remarks and returned the proposal<br>The Assistant Executive Engineer/MRT Metering vide letter dt: 17.02.2018 for service connection nos 057-003-2157 and 057-003-2268 has concluded and recommended for revision of bill for the meter defective period as per TNERC'S supply code.<br><br>Hence, the dropping proposal of the Executive Engineer/O&M/Avadi is not feasible of compliance. |
| Executive Engineer/O&M/Avadi- letter dt:31.05.2024 (Based on the consumer representation vide letter dt.25.03.2021.) | Audit branch vide letter dt:09.07.2021 has given the following remarks. It is requested to produce the MRT report along with service connection docket with related documents forwarded to this office for taking further action in this regard. |
| Executive Engineer/O&M/Avadi letter dt 27.07.2022 (Resubmitted the proposal for withdrawal of Audit slip after attending the remarks of Audit branch letter dt:09.07.2021) | Audit branch vide letter dt. 19.11.2022 has given the following remarks.<br>The field officers report as per Lr.No AEE/MRT/CEDC/West as F.LTCT/D.NO.398.DT:17.02.2018, |

| | |
|---|---|
| | The material evidence for the conditions of business and also stating that the said premises under vacant may be forwarded to this office.<br>As seen from the consumer ledger the AAO/Revenue may come forward for revision of recovery with genuineness of working details towards shortfall of average due to the meter defective declared on 15.02.2018 and new meter has been fixed. After receiving the above details the action will be taken in this regard. |
| Executive Engineer/O&M/Avadi letter dt 17.03.2023 (Resubmitted the proposal for withdrawal of Audit slip after attending the remarks of Audit branch letter dt:19.11.2022) | Audit branch vide letter dt. 22.05.2023 has given the following remarks.<br>1. SC.NO.057-003-2157 (AS NO.12)<br>The meter has been replaced on 15.02.2018, SC.NO.057-003-2157 with struck-up reading@1096.79 during 12/2016 assessment itself. The Assistant Executive /MRT has also recommended for billing revision for the period from 24.10.2016 to 15.02.2018. 1.SC NO:057-003-2268(AS NO 13).<br>The meter has been replaced on 25.07.2019, SC NO-057-003-2262 with struck-up reading@338.71 during 06/2018 assessment itself. The Assistant Executive/MRT has also recommended for Billing revision for the period from 31.12.2016 to 15.02.2018.<br>In view of the above the Audit slips rised may made good. |

But, all the proposals have not been considered by the Audit Branch and reported that is not feasible of compliance to drop the audit slip.

6.4 The Respondent has submitted that the petitioner approached the CGRF for cancellation of above audit shortfall, as per the request of consumers representation through RTI and RTI commission regarding dropping proposal of the Audit short fall amounts to Audit is informed to the petitioner vide letter dated 21.07.2023.

6.5 The Respondent has submitted that the petitioner has availed two EB service connections SC No. 057- 003-2157 and SC No. 057-003-2268 around the year 2014-2015 for running of his rice mill located in Athur village. Initially, the rice mill has been run by him. But due to his health issues, the running stopped. During that time, he promptly gave letter to the Assistant Engineer/TNEB/Sothuperumbedu on 16.11.2016, informing about stopping of running and requesting to put minimum amount for the service connections 057-003-2157 and 057-003-2268. He had also got dated acknowledgement with Seal from the office. Then, the billing has done as minimum since no consumption or meagre consumption has been only recorded in our service meters and during every billing the service connection has been remarked as "Not in use" by the Assistant Engineer. Unfortunately, during the billing month of 01/2018, the AE/ Sothuperumbedu has informed that both the service connection meters were defective with no display' and billed minimum only as average since the premises was vacant and the meters were replaced on 15.02.2018.

6.6 The Respondent has submitted that on 01.03.2018, the appellant gave his rice mill on lease to Thiru S. Karthikeyan for one- year lease agreement from 01.03.2018 to 28.02.2019 for an initial advance amount of Rs. 2,00,000/- and monthly rental of Rs. 14,000/- Thiru.S.Karthikeyan taken order from Tamil Nadu Civil Supply Corporation for Paddy hulling. The copy of the lease agreement is also enclosed herewith. Further, he has also enclosed the bank statement of tenant (KALIGAMBAL MORDERN RICE MILL) showing the Cheque cleaning to his name (LAKSHMIPATHY) for Rs.2,00,000/- 0n 06.01.2018 and rental charges clearance from 03/2018 through cheque every month from then. After the rental agreement, his tenant Thinu. S. Karthikeyan, vide letter dt. 19.08.2018, also informed the Assistant Engineer/TNEB/Southperumbedu, that he had taken lease of his rice mill from 01.03.2018 and running only from 05.03.2018. He has also attached the acknowledged copy also.

6.7 The Respondent has submitted that hence, from the above circumstances and reading recorded by the Assistant Engineer/TNEB/South perumbedu, it is evident that his rice mill is not in use from 11/2016 to 03/2018. Further, he has followed all necessary procedures such as informing about rice mill not in use on 16.11.2016 and mill under lease from 01.03.2018 with bank statement about advance amount transaction as substantial proof. He has also given ‘N’ number of grievance petitions in AE office, AD office and EE office.

6.8 The Respondent has submitted that audit simply informed that they put based on MRT recommendation, In MRT recommendation too, they also mentioned that EB meter parameters could not be downloaded due to meter defective. Then it is evident that the period of defective could not be ascertained by MRT too. But they vaguely without any technical evidence, the recommended billing revision from 10/2016. But, he has given letter on 16.11.2016 informing that his mill is not in use. Hence, the audit amount is based on assumptions only and they don't have any technical evidence. Hence, the petitioner requested to drop the audit shortfall arrears of Rs.6,23,210/- against his EB service connection 057-003-2157 for the period from 10/2016 10 02/2018 and Rs.6.61,023/- against his another service connection 057-003-2268 for the period from 12/2016 to 02/2018.

6.9 The Respondent has submitted that two service connections were availed by the petitioner Thiru G Lakshmipathy for running rice mill at Athur village. Service connection nos.057-003-2157 was effected on 22.07.2014 and on reviewing the consumer ledger, it was noted that there is no consumption recorded upto 27.07.2015 and meagre consumption was recorded upto 28.01.2016. From 10/2016-03/2018 only minimum charges were paid by the petitioner. Service connection nos 057-003-2268 was effected on 27.11.2015 and on reviewing the consumer ledger, it was noted that the actual energy was recorded from 11/2016 to 01/2018. Due to non-operation of the mill, the petitioner. Thiru. G. Lakshmipathy has leased out the rice mill to Thiru Karthikeyan. Since both the meters were defective, the same were replaced on 15.02.2018. Subsequently, Audit raised the slip for average shortfall in both the service connections considering the recommendation given by the MRT vide letter dated 17.02.2018.

6.10 The Resondent has submitted that based on the representations of the petitioner, the dropping proposal was sent to Audit branch at various occasions along with the letter of the consumer addressed to the Assistant Engineer/O&M/Sothuperumbedu vide letter dated 16.11.2016 intimating the status of the premises as vacant. But the Audit has not accepted

to drop the slip stating that the slip raised are made good as per the recommendations of the MRT. While taking the current consumption reading on 30.01.2018 for the billing month of 01/2018 in service connection nos.057-003-2157 and 057-003-2268, the meter display failure has been noticed and

| RELEASED METER: | FIXED METER: | CONSUMER DETAILS: |
|---|---|---|
| MAKE LANDISGYR | MAKE HPL | Sanctioned load: 111KW |
| SL.NO TN119503 | SL. NO:498025 | Tariff-IIIB |
| PO.NO:187/D774/13 | PO.NO: 189/D775/13 | CTR-200/5A MF-40 |

INITIAL READING DATE 15.02.2018

CKWH-2.13 KVAH-2.20 PF-1.00 MDKW-0.00

6.11 The Respondent has submitted the Billing Recommendation for the service No: 057-003-2157 Since, the existing meter was in burnt condition, the meter data could not be downloaded. The defective period may be taken from 24.10.2016 (Date of last reading) to 15.02.2018 (Date of meter changed). The bill revision for the defective period may be done based on the instruction given by the TNERC.

A/C Number 057-003-2268 Based on the of AEE/REDHILLS, the LTCT service at SOTHUPEREMBEDU section, in the name of M/S C.LAKSHMIPATHY bearing A/C no- 057-003-2268 was inspected by MRT on 15.02.2018 to replace the DEFECTIVE meter. At the time of inspection, all MRT seals were found in tact. Power check could not be carried out, FR and meter Data could not be downloaded. Since, the existing meter had No display. The existing defective meter was replaced by a healthy meter and normal metering was restored satisfactorily power check was carried out and found to be in order.

| RELEASED METER: | FIXED METER: | CONSUMER DETAILS: |
|---|---|---|
| MAKE HPL | MAKE HPL | Sanctioned load: 111KW |
| SL. NO:481822 | SL. NO:498024 | Tariff-IIIB |
| PO.NO:189/D775/13 | PO.NO: 189/D775/13 | CTR-150/5A MF-35 |

INITIAL READING DATE 15.02.2018

CKWH-1.55 KVAH-1.63 PF-1.00 MDKW-0.00

6.12 The Respondent has submitted the billing recommendation. Since, the defective meter had no display, the meter data could not be downloaded. The defective period may be taken from 31.12.2016 (Date of last normal reading) to 15.2.2018 (Date of meter changed). The bill revision for the defective period may be done based on the instruction given by the TNERC. Later, the audit has reviewed the service connection nos. 057-003-

2157 and 057-003- 2268 and issued the audit slip vide no. 12/2018 dated 24.05.2018 & 13/2018 dated 25.05.2018 respectively towards average shortfall for an amount of Rs 6,23,210/- & Rs.6,61,023/- respectively. On a review of the consumer ledger it is noticed that the above said consumer As per Recommended by AEE/MRT Lr.No. VideNo: AEE/MRT/CEDC/ WEST/F.LTCT/D398/2018, Dt.17.02.2018. The above service connection inspected by MRT on 15.02.2018 to replace the meter.

6.13 The Respondent has submitted that on viewing the consumer ledger of service connection no.057-003-2157, it is noted that the reading has been taken by the respondent every month only on the recorded as meter defective in both the services. But the average billing was not done in both the services. Being LTCT service connections, MRT wing was informed to inspect the above two service connections. Based on the request of the Assistant Executive Engineer/O&M/Redhills, the MRT inspected 2 nos. of LTCT service connections stands in the name of G.Lakshmipathy and replaced the meters in both the service connections on 15.02.2018, and furnished the report vide letter dated 17.02.2018.

6.14 The meter change details as in consumer ledger of service connection no. 057-003-2157 is as follows.

Old Meter Details New meter details

| Meter Type | Meter Make | Meter No. | MF | Capacity | Removed Date | Meter Type | Meter Make | Meter No | MF | Capacity | Installed Date |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Static Electronic Meter with MD recording facility | L&G | TN119503 | 40 | 5 | 15.02.2018 | Static Electronic Meter with MD recording facility | HPL ELECTRIC AND POWER | 498025 | 40 | 5 | 15.02.2018 |

6.15 The Respondent has submitted that meter change details as in consumer ledger of service connection no. 057- 003-2268 is as follows:

Old Meter Details New meter details

| Meter Type | Meter Make | Meter No. | MF | Capacity | Removed Date | Meter Type | Meter Make | Meter No | MF | Capacity | Installed Date |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Static Electronic Meter with MD recording facility | HPL | 481822 | 30 | 5 | 15.02.2018 | Static Electronic Meter with MD recording facility | HPL ELECTRIC AND POWER | 498024 | 30 | 5 | 15.02.2018 |

MRT Report: A/C Number -057-003-2157 Based on the of AEE/REDHILLS, the LTCT service at SOTHUPEREMBEDU section, in the name of M/S C.LAKSHMIPATHY bearing A/C no-057-003-2157 was inspected by MRT on 15.2.18 to replace the BURNT meter. At the time of inspection, all MRT seals were found in tact. Power check could not be carried out, FR and meter Data could not be downloaded. Since, the existing meter had burnt and No display. The existing burnt meter was replaced by a healthy meter and normal metering was restored satisfactorily power check was carried out and found to be in order.

6.16 The Resondent has submitted that on viewing the consumer ledger of service connection no 057-003-2268, it is noted that the reading has been taken by the respondent every month only on the site inspection of the service connection. Hence, the meter display could have been failed only after 29.12.2017 and the meter defective period has to be considered from 30.12.2017 to 15.02.2018. Hence, the respondent is eligible to claim the shortfall for the meter defective period from 30.12.2017 to 15.02.2018 whereas it has been considered that the meter defective just because the consumption is low for the period from 10/2016 to 02/2018.

6.17 The Respondent has submitted that the audit cannot assume that the meter is defective since the reading for the period from 10/2016 to 12/2017 which is healthy the reading taken by the Field officials on site inspection. During the period the meter is healthy which have been recorded as "Not in use" Hence, it is calculated the shortfall after changing the defective meter defective period from 30.12.2017 to 15.02.2018 accordance with Regulation 11 of the TNE Supply Code arrived as per the CCGRE order since the consumption is gradually increased after the replacement of new meter.

**Working sheet for Sc. No:057-003-2268 short fall period from 30.12.2017 to 15.02.2018 Revised Audit shortfall as per CGRF order**

1. Sc. No.057-001-2268 (Slip No. 13)

30.12.2017 to 29.01.2018 (bill calculation taken for BOAB audit slip workings)
CC Charges =4900 X Rs. 6.35 =31,115.00
P.F. 85-88-27X1.5%-40.5 =12,601.57
E.Tax 44.86 X35-1570.1-PF+
CC X 5% = 2.264.33
FC 75X35 = 2.625.00
---------------
48,605.90
Less Already collected = 2.625.00
----------------
Shortfall yet to be collected 45,981.00
----------------

02/2018 (CC Charges)

Average From 30.01.2018 to 15.02.2018
4900X16 days/30 = 2613 Units
Actual Recorded unit
0.24 X 30MF = 7 Units
----------------
2620 Units
----------------
CC 2620X6.35 = 16,637
3.6X35-126-CC X 5% = 838
FC 75 X 35 = 2,625
---------------
= 20,100
Less: Already collected = 2,697
---------------
Shortfall yet to be collected = 17,403
--------------

Total Revised amount =45,981 + 17,403-Rs.63,384/-

site inspection of the service connection. Hence, the meter display could have been failed only after 29.12.2017 and the meter defective period has to be considered from 30.12.2017 to 15.02.2018. Hence, the respondent is eligible to claim the shortfall for the meter defective period from 30.12.2017 to 15.02.2018 whereas it has been considered that the meter is defective just because the consumption is low for the period from 10/2016 to 02/2018.

6.18 The Respondent has submitted that the audit cannot assume that the meter is defective since the reading for the period from 10/2016 to 12/2017 which is healthy the reading taken by the Field officials on site inspection. During the period the meter is healthy which have been recorded as "Not in use" Hence, it is calculated the shortfall after changing the defective meter defective period from 30.12.2017 to 15.02.2018 accordance with Regulation 11 of the TNE Supply Code arrived as per the CGRF order since the consumption is gradually increased after the replacement of new meter.

<u>Working sheet for SC.No:057-003-2157 short fall period from 30.12.2017 to 15.02.2018</u>

Revised Audit short fall as per CGRF order

1. Sc. No:057-003-2157: (Slip No:12)

29.12.2017 to 30.01.2018 (bill calculation taken for BOAB audit slip workings)

| | |
|---|---|
| CC. Charges-5717 X. Rs. 6.35 | = 36,302.95 |
| E.Tax 92.75 X35=3246 CC X 5% | = 1,977.46 |
| FC 101X35 | = 3,535.00 |
| | --------------- |
| | 41,815.41 |
| Less: Already collected | = 3,535.00 |
| | ---------------- |
| Shortfall yet to be collected | 38,280.00 |
| | ---------------- |

02/2018 (CC Charges)

| | |
|---|---|
| Average From 01.02.2018 too 15.02.2018 | |
| 5717X15 days/30 | = 2858 Units |
| Actual Recorded unit | |
| 3.08 X 40MF | = 38 Units |
| | -------------- |
| | 2896 Units |
| | -------------- |
| 2896X6.35 | = 18,389.60 |
| 92.75X35-3246-CC X 5% | = 1,081.79 |
| FC 101 X 35 | = 3,535.00 |
| | ---------------- |
| | = 23,006.39 |
| Less: Already collected | = 3,790.00 |
| | ---------------- |
| Shortfall yet to be collected | = 19,216.00 |
| | --------------- |
| Total Revised amount | = 38,280+19,216=Rs.57,496/- |

6.19 The Resondent has submitted that in view of the above, the average shortfall shall be computed for the meter defective Period from 30.12.2017 to 15.02.2018 in service connection no.057-003-2157 and from 29.12.2017 to 15.02.2018 in service connection to 057-003-2268 adopting Regulation 11 of the Tamil Nadu Electricity Supply Code. As per the CGRF order, the slips raised by the Audit branch vide no. 12 Dated 24.05.2018 in service connection no.057-003-2157 & 13 Dated 25.05.2018 in service connection no.057-003-2268 are set aside and the forum directs the respondent to calculate the shortfall for the meter defective period from 30.12.2017 to 15.02.2018 in service connection no.057-003-2157 and from 29.12.2017 to 15.02.2018 in service connection no 057-003-2268 adopting regulation 11 of the Tamil Nadu Electricity Supply Code and intimate the same to the petitioner within 4 weeks from vide Lr.No:AE/O&M/SPD/F.Audit/ D.No:012(1)/23-24. Dated 30.01.2024. Under these circumstances, it is humbly prayed that the Honorable TNE

Ombudsman may please dismiss the Appeal Petition No.25 of 2024 as may deem it fit and proper and thus render Justice)

7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தன்னுடைய அரிசி ஆலையை இயக்காதபோது இயக்கப்போவதில்லை என்றும், மீண்டும் இயக்கும்போது இயக்கப்போகிறோம் என்றும், தானும், தனது குத்தகை தாரரும் உரிய இள நிலைப் பொறியாளர் அவர்களிடம் எழுத்து மூலமாக தகவல் தெரிவித்த கடிதத்தில் ஒப்புதலும் பெற்றுள்ளதாகவும், மேலும் ஒவ்வொரு மாதமும் உரிய குறைந்தபட்ச தொகையை செலுத்தி வந்துள்ளதாகவும், தனது மின் இணைப்பு எண்.057–003–2157 மற்றும் 057–003–2268 க்கு மின்பயன்பாடு இல்லாத காலத்தில் தவறுதலாக கணக்கீடு செய்யப்பட்ட மின்கட்டண தொகையை ரத்து செய்யுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

7.3 உதவி பொறியாளர் அவர்கள் மின்சாரம் உபயோகப்படுத்தாத காலத்திற்கும் குறைந்தபட்ச மின்கட்டணம் செலுத்தியும், கூடுதலாக ரூ.6,23,210 + 6,61,023 = 12,84,233/– செலுத்த அறிவுறுத்தியதை எதிர்த்து, மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் அளித்த தீர்ப்பில் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற தலைவர் அவர்களிடம் முறையிட்டதன் பேரில் இரண்டு மின் இணைப்புகளுக்கும் முறையே ரூ.57,496 + 63386 = 1,20,880/– செலுத்த வேண்டுமென்று தனக்கு தீரப்பு அளிக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 மின் மீட்டர் பழுதடைந்ததை கண்டுபிடித்து விட்டதனால், புதியதாக 2 மீட்டர்களும் பொறுத்தப்பட்டதாகவும், மீட்டர் பொருத்தப்பட்ட பின்னரும் ஓரிரு மாதம் அரிசி ஆலையை இயக்காததால் மீட்டரும் இயங்கவில்லை என்றும், நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் ஆணையிட்டவாறு மின் இணைப்பு எண் 057–003–2157 நாள் 30.12.2017 முதல் 15.02.2018 வரை ரூ.57,496/– மற்றும் மின் இணைப்பு எண் 057–003–2268 நாள் 29.12.2017 முதல் 15.02.2018 வரை ரூ.63,384/– ஆகமொத்தம்

ரூ.1,20,880/- ஐ குறைவுத்தொகை என்று செலுத்த உத்திரவிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.5 செயற்பொறியாளர் ஆவடி அவர்கள் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் ஆணையிட்டவாறு மின் இணைப்பு எண் 057-003-2157 நாள் 30.12.2017 முதல் 15.02.2018 வரை மற்றும் 057-003-2268 நாள் 29.12.2017 முதல் 15.02.2018 வரை உள்ள காலத்தில் 2 மீட்டர்களும் "உபயோகத்தில் இல்லை" என்று காட்டியுள்ளன என்று வாதியே தனது வாதுரையில் தெரிவித்துள்ளதாகவும், மேற்கண்ட சூழ்நிலையில் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் ஆணையிட்டவாறு குறைவுத்தொகை செலுத்த உத்திரவிட்டதை இரத்து செய்வதே நீதியை நிலை நிறுத்துவதாக அமையும் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.6 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் மின்இணைப்பு எண்கள்.057-003-2157 மற்றும் 057-003-2268 ஆகியவை திரு. G. லட்சுமிபதி என்ற பெயரில் 2014-15ம் ஆண்டு அரிசி ஆலை இயக்குவதற்காக அனுமதிக்கப்பட்ட மின்சுமை 101 KW மற்றும் 75 KWவுடன் LT IIIB மின்கட்டணத்தின் கீழ் முறையே வழங்கப்பட்டதாகவும், மேல்முறையீட்டாளர் தன்னுடைய உடல் நிலை சரியில்லாத காரணத்தால் அரிசி ஆலை இயக்குவதை நிறுத்தி வைப்பதாகவும், எனவே, மின்இணைப்பு எண்கள்.057-003-2157 மற்றும் 057-003-2268க்கு குறைந்தபட்ச கட்டணம் விதிக்குமாறு உதவிபொறியாளருக்கு 16-11-2016ல் கடிதம் கொடுத்ததாகவும் தெரிவித்துள்ளார்.

7.7 மேல்முறையீட்டாளரின் மின்இணைப்புகளுக்கு குறைந்தபட்ச கட்டணம் வசூல் செய்த நிலையில் ஒவ்வொரு கணக்கீட்டின் போதும் மின்இணைப்பு "பயன்பாட்டில் இல்லை" என உதவிபொறியாளரால் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், ஆனால் 01/2018 கணக்கீட்டின் போது மின்அளவி பழுதடைந்துள்ளதாக பதிவு செய்யப்பட்டு 15-02-2018 அன்று புதிய மின்அளவி மாற்றப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் தணிக்கை துறையால் மின்இணைப்பு எண் 057-003-2157க்கு 10/2016 முதல் 02/2018 வரையிலான காலக்கட்டத்திற்கு ரூ.6,23,210/- தணிக்கை பற்றாக்குறை நிலுவைத் தொகையும் மின்இணைப்பு எண் 057-003-2268க்கு 12/2016 முதல் 02/2018 வரையிலான காலக்கட்டத்திற்கு ரூ.6,61,023/-

தணிக்கை பற்றாக்குறை நிலுவைத் தொகை செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 மேற்கூறிய வாதுரை மற்றும் எதிர்வாதுரையின் அடிப்படையில் மேல்முறையீட்டு மனுவை தீர்வு செய்ய அதன் அடிப்படை காரணங்களை அறிய வேண்டியிருக்கிறது. அவை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

மின்அளவி பழுது என்ற அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் மின்அளவி எதிர்மனுதாரரால் MRT மூலம் பரிசோதிக்கப்பட்டு, மின்இணைப்பு 057–003–2157 உடைய மின்அளவி பழுது காலம் 24–10–2016 முதல் 15–02–2018 வரை எனவும், மின்இணைப்பு எண்.057–003–2268 உடைய மின்அளவி பழுது காலம் 31–12–2016 முதல் 15–02–2018 வரை எனவும் தீர்வு செய்தபடியால் அதன் அடிப்படையில் மேல்முறையீட்டாளருக்கு தணிக்கை குழுவின் துண்டு அறிக்கை எண்.12 மற்றும் 13 நாள் 24–05–2018 மற்றும் 25–05–2018ன் அடிப்படையில் உதவி பொறியாளரால் 15–11–2018 அன்று மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

7.9 அதன்படி மின்இணைப்பு எண்.057–003–2157க்கு ரூ.6,23,210 மின்இணைப்பு எண்.057–003–2268க்கு ரூ.6,61,023/– என கணக்கிடப்பட்டு மேல்முறையீட்டாளருக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்கடிதம் பெற்ற 7 நாட்களுக்குள் மின்அளவி பழுதிற்கான குறைவுதொகையை கட்ட வலியுறித்தியது தெரியவருகிறது. ஆனால் மேல்முறையீட்டாளர் கடிதம் பெற்ற 2018 காலத்திலிருந்து பல விதமான முறையீடுகள் செய்தும் அம்முறையீடுகள் அனைத்தும் தணிக்கை துறையினரால் நிராகரிக்கப்பட்ட நிலையில் எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளரை குறைவுதொகையை செலுத்த வலியுறுத்தி வந்தது தெரியவருகிறது.

7.10 அக்காலக்கட்டத்தில் மேல்முறையீட்டாளரின் இரண்டு மின்இணைப்புகளும் பயன்பாட்டில் இருந்ததும் தெரியவருகிறது. இந்நிலையில் மேல்முறையீட்டாளர் மின்நுகர்வோர் குறைதீர்மன்றத்தில் 16–06–2023ல் முறையிட்டதன் அடிப்படையில் மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் 18–11–2023 தனது இறுதி ஆணையை வழங்கியுள்ளது. அவ்வாணையில் மேல்முறையீட்டாளருடைய நுகர்வோர் பேரேட்டை ஆய்வு செய்ததில் மின்இணைப்பு எண்.057–003–2157க்கு 29–12–2017 மின்கணக்கீடு செய்து அடுத்த

மாத 01/2018 மாதத்திற்கான மின்கணக்கீடு காலத்தில் மின்அளவி பழுது என்று பதிவு செய்யப்பட்டதால், 29-12-2017லிருந்து மின்அளவி மாற்றிய 15-02-2018 அன்று வரை மட்டுமே மின்அளவி பழுதிற்கான சராசரி கட்டணத்தை வசூலிக்க ஆணையிட்டுள்ளது.

7.11 அதேபோல, மின்இணைப்பு எண்.057-003-2268க்கு 28-12-2017ல் மின்கணக்கீடு எடுத்தும் 30-12-2017ல் பதிவு செய்ததன் அடிப்படையில் அடுத்த மாத 01/2018 மாதத்திற்கான மின்கணக்கீடு காலத்தில் மின்அளவி பழுது என்று பதிவு செய்யப்பட்டதால் 30-12-2017லிருந்து மின்அளவி மாற்றிய 15-02-2018 வரை மட்டுமே மின்அளவி பழுதிற்கான சராசரி கட்டணத்தை வசூலிக்க ஆணையிட்டதும் தெரியவருகிறது. அதன்அடிப்படையில் எதிர்மனுதாரர் குறைவுத்தொகையை கீழ்க்கண்டவாறு திருத்தி அனுப்பியது தெரியவருகிறது.

| தேதி | மின்இணைப்புஎண் | மின்அளவி பழுதான காலம் | திருத்தி அமைக்கப்பட்ட குறைவு தொகை |
|---|---|---|---|
| 30-01-2024 | 057-003-2157 | 12/2017 to 02/2018 | ரூ.57,476 /- |
| 30-01-2024 | 057-003-2268 | 12/2017 to 02/2018 | ரூ.63,384 /- |

7.12 இந்நிலையில் மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடம் தன்னுடைய மின்இணைப்புகள் 057-003-2157 மற்றும் 057-003-2268 S.F.No.7/291, 27/292 பஸ்தபாளையம் கிராமம், ஆத்தூர், சென்னை – 67 என்ற ஒரே முகவரியில் உள்ள அரிசி ஆலைக்கு வழங்கப்பட்ட மின்இணைப்புகள் என்றும் வியாபாரம் நடத்த முடியாத காரணத்தினால் மாதாந்திர குறைந்த கட்டணம் 16-11-2016லிருந்து செலுத்துவதாக உரிமைதாரரிடம் தெரிவித்ததன் அடிப்படையில் தனக்கு மீண்டும் முதலில் அனுப்பப்பட்ட குறைவு தொகை ரூ.6,23,210/- மற்றும் ரூ.6,61,023/- என்பதை மீண்டும் திருத்தி அமைக்கப்பட்ட குறைவு தொகையான ரூ.57,476/- மற்றும் ரூ.63,384/-ஐ தள்ளுப்படி செய்யுமாறு முறையிட்டுள்ளார்.

7.13 எதிர்மனுதாரர் மின்நுகர்வோர் குறைதீர்மன்ற ஆணைக்கு பின்பு அக்குறைவுத் தொகையை திருத்தி அதை தணிக்கை பிரிவின் கவனத்திற்கு கொண்டு சென்று அதன் அடிப்படையில் தணிக்கை பிரிவும் குறைவு தொகையை திருத்தி அமைத்து திருத்தப்பட்ட குறைவு தொகையை மேல்முறையீட்டாளரிடமிருந்து வசூலித்து

அத்தகவலை தெரிவிக்குமாறு அறிவுறுத்தியுள்ளது. அவ்வாவணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

C. RAJAKUMARI,
Deputy Chief Internal Audit Officer,
Audit Branch, Chennai North Region.

Dispensary Bldg, 1st Floor,
144, Anna Salai,
Chennai – 600 002.

**Lr.No.0091/ Pt.No.026/F.37/F.376-II /2024, DT.15.02.2024.**

To
THE EXECUTIVE ENGINEER,
Operation and Maintenance/Avadi,
No.229, N.M.Road,
Avadi, Chennai-600 054.

Sir,

Sub:- Audit Branch – Chennai North Region – LT Revenue Audit – Period from 04/2016 to 03/2017 – AS.No.12 & 13 amounting to Rs.623210 & Rs.661023 – Revised amount – Reg.

Ref:- Lr.No.EE/O&M/AVD/RB/AAO/AS/F.BOAB/D.35/2023, dt:18.01.2024.

******

With reference to the above letter cited, the following shortfall amount may be recovered and intimated to audit early.

| AS.No. | SC.No. | Period | Existing amount | Revised amount |
|---|---|---|---|---|
| 12 | 057-003-2157 | 04/16-03/17 | Rs.623210/- | Rs.57496/- |
| 13 | 057-003-2268 | 04/16-03/17 | Rs.661023/- | Rs.63384/- |

As per CGRF order dt.18.11.2023 the above audit slips are revised and the collection details may be furnished to audit.

Yours faithfully,

-Sd- 15.02.2024
Deputy Chief Internal Audit Officer,
Chennai North Region.

Copy to file.

7.14 மேல்முறையீட்டாளர் தற்சமயம் திருத்தி அமைக்கப்பட்ட தொகையான ரூ.57,476/– மற்றும் ரூ.63,384/–ஐ தள்ளுபடி செய்ய வலியுறுத்திய நிலையில் கேட்புரையின் பொழுது தங்களது அரிசி ஆலையின் பணிகள் நடைபெறாத நிலையில்

பாதுகாப்பு மற்றும் ஆய்வு அடிப்படையில் 16-11-2016 காலத்திலிருந்து மின் பயன்பாடு இருந்ததா இல்லையா என்று வினவிய பொழுது அரிசி ஆலைக்கான உபகரணங்களை இயக்கவில்லை என்று வாதிட்ட பொழுதும் அதில் உள்ள மின்விளக்குகள் தேவையின் பொருட்டு பயன்பாட்டில் இருந்துள்ளது என்பதை மறுக்கவில்லை.

7.15 மேல்முறையீட்டாளரின் வாதங்களின்மூலம் 16-11-2016லிருந்து 15-02-2018 வரை அந்த ஆலையை அவர் ஆய்வு செய்யவில்லை மற்றும் பாதுகாப்புக்காக மின்விளக்குகள் பயன்பாட்டில் இல்லை என்ற வாதம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை. இந்நிலையில் மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் தன்னுடைய ஆணையை மின்நுகர்வோர் பேரேட்டின் அன்றைய காலகட்டத்தில் உரிய அலுவலரால் மின்அளவி பழுது என்று பதிவு செய்யப்பட்ட நிகழ்விற்கு பின்பு பழுதான மின்அளவி மாற்றப்பட்ட நாள் வரையுள்ள இடைப்பட்ட காலத்திற்குதான் குறைவுத்தொகை வசூலிக்க வேண்டுமென ஆணையிட்டுள்ளது.

7.16 மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் தன்னுடைய ஆணையை மின்நுகர்வோர் பேரேட்டின் அடிப்படையில் ஆய்வு செய்து வழங்கியுள்ளதால், மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பில் இருந்த மின்அளவியின் நிலை குறித்து அறிய நான் Evidence Act, 1872 Section 35 விதியை ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *“35. Relevancy of entry in public record or an electronic record made in performance of duty. An entry in any public or other official book, register or record or an electronic record stating a fact in issue or relevant fact and made by a public servant in the discharge of his official duty or by any other person in performance of a duty specially enjoined by law of the country in which such book, register or record or an electronic record is kept is a relevant fact.”*

மேற்கூறிய சான்று சட்டத்தின் படி எந்தவொரு அரசாங்க பதிவும் நாட்டின் சட்டத்தின் கீழ் சாட்சியாகும் என தெரியவருகிறது. எதிர்மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் வாயிலாக மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் மின்நுகர்வோர் பேரேட்டை ஆய்வு செய்து மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பில் இருந்த மின்அளவி பழுதிற்கான காலத்தை திருத்தி அமைத்துள்ளது. எனவே, மேற்கூறிய சான்று சட்டத்தின் படி மின்குறைதீர்மன்றம் வழங்கிய ஆணை எனக்கு ஏற்புடையதாக உள்ளதால், குறைதீர்

மன்றம் வழங்கிய ஆணையில் மாற்றம் எதுவும் தேவையில்லை என தீர்வு செய்யப்படுகிறது.

**8.0 முடிவுரை:**

8.1 பத்தி 7–ல் உள்ள தீர்வுகளின் அடிப்படையில் மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் வழங்கிய ஆணையின்படி மின்இணைப்பு எண்.057–003–2157–ற்கு விதிக்கப்பட்ட ரூ.57,496/– மற்றும் மின்இணைப்பு எண்.057–003–2268ற்கு விதிக்கப்பட்ட ரூ.63,384/– ஆகிய சராசரி குறைவுத்தொகைகள் மேல்முறையீட்டாளரால் செலுத்தப்படவேண்டும் என முடிவு செய்யப்பட்டுள்ளதால், எதிர்மனுதாரர் மேற்கண்ட சராசரி குறைவுத்தொகை மற்றும் இதர கட்டணங்கள் ஏதேனும் இருப்பினும் சேர்த்து வசூலிக்க அறிவுறுத்தப்படுகிறது.

8.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 25/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
**மின்குறைதீர்ப்பாளர்**

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

பெறுநர்

1. திரு.கோ.இலட்சுமிபதி – By RPAD
த/பெ.கோவிந்தசாமி,
எண்.7/21, பெஸ்தபாளையம்,
ஆத்தூர் கிராமம், சோழவரம் அஞ்சல்,
பொன்னேரி வட்டம்,
சென்னை – 600 067.

2. செயற்பொறியாளர்/இ&ப/ஆவடி,
சென்னை மின் பகிர்மான வட்டம் /மேற்கு
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.229, என்.எம் ரோடு, ஆவடி, சென்னை – 600054.

4. மேற்பார்வை பொறியாளர், – By Email
சென்னை மின் பகிர்மான வட்டம்/ மேற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33KV திருமங்கலம் வளாகம், அண்ணா நகர், சென்னை – 40.

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.